<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>
**MCOP No. 92/2019**

**நாள் : 19.07.2024**

**PW1 : பழனிச்சாமி**

**த/பெ. சுப்பான்**

**<u>3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :</u>**

நான் இருசக்கர வாகனத்தில் செல்லும் பொழுது முன்னால் சென்ற ஜேசிபி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. ஜேசிபி வாகன ஓட்நர் தான் திடீரென திரும்பி விட்டார். விபத்தின் போது ஜேசிபி வாகனம் எனக்கு முன்னால் போய்க்கொண்டிருந்தது என்றால் சரிதான். அந்த சாலை நான்கு வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்கள் செல்ல முடியும். விபத்து வழக்கில் போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஜேசிபி வாகனம் வலதுபுறமாக திரும்பியதாக சொல்வது தவறு என்றாலும் அந்த இடத்தில் ஜேசிபி வாகனத்தை வலதுபுறம் திருப்ப வேண்டிய அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல. விபத்து நடந்தவுடன் சக்தி மருத்துவமனைக்கு சென்றேன். சக்தி மருத்துவமனையில் செய்து கொண்ட சிகிச்சை குறிப்புகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு நாள்கள் கழித்து துரைச்சாமி மருத்துவமனைக்கு சென்றேன். சக்தி மருத்துவமனை சிகிச்சை ஆவணங்களை தாக்கல் செய்தால் ஜேசிபி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படவில்லை என்ற விஷயம் தெரிந்து விடும் என்ற காரணத்தால் தான் அதனை தாக்கல் செய்யாமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. 10.06.2019–ல் விபத்து நடந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். புகார் 10 நாள்கள் காலதாமதமாக 20.06.2019–ல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். விபத்து ஜேசிபி வாகனத்தால் நடைபெறவில்லை என்றாலும் இழப்பீடு பெற வேண்டி ஜேசிபி வாகனத்தால் விபத்து ஏற்பட்டதாக பொய்யாக புகார் கொடுத்திருக்கிறேன் என்றாலும், அதனால் தான் புகார் கொடுக்க காலதாமதம் ஆகியுள்ளது என்றால் சரியல்ல. ஜேசிபி வாகன ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்பதால் இந்தத வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் 3–ம் எதிர்மனுதார் எனக்கு எவ்வித இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல.

1–ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமமம் இல்லாத காரணத்தினால் காப்பீட்டு நிபந்தனை மீறப்பட்டுள்ள நிலையில் 3–ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடும் தர வேண்டியதில்லை என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டுக்கு பிறகு வேறு எந்த மருத்துவமனையிலும் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற வில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் பூரணமாக குணமாகி விட்டது என்றாலும் எனக்கு எவ்வித நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் லாரி ஓட்டுநர் ஆவேன். போன வருடம் நவம்பர் மாதத்தில் என்னுடைய கனரக வாகன ஓட்டுநர் உரிமத்தை (ம.சா.ஆ.10) புதுப்பித்தேன் என்றால் சரிதான். என்னால் முன்பு போல் எல்லா வேலைகளையும் செய்ய முடிகிறது என்பதாலும் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்ற காரணத்தினாலும் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என்பது சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட வாகன காப்பீட்டின் படி 3–ம் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u> இல்லை.**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

S INDULATHA

Digitally signed by S INDULATHA
Date: 2024.07.19 14:39:21 +0530

Subordinate Judge,
Avinashi.